(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 30.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 யூன் 18 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்கள்.

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ ஹரின் பிரனாந்து,** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலும் அமுனுகம,** முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசநாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ அகில எல்லாவல**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ செல்வராசா கஜேந்திரன்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ லலித் வர்ண குமார**

**கௌரவ கெவிந்து குமாரதுங்க**

**கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி**

**கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு**

**கௌரவ நாலக பண்டார கோட்டேகொட**

**கௌரவ வீரசேன கமகே**

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஜகத் பிரியங்கர

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ எஸ்.சீ. முதுகுமாரண

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ நிபுண ரணவக

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

**கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“அரசியலமைப்பின் 121(1) எனும் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட ‘இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தம்)’ எனத் தலைப்பிடப்பட்ட சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் எனக்கு கிடைத்துள்ளது என்பதை நான் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

குறிப்பிடப்பட்ட தீர்மானத்தில், குறித்த சட்டமூலம் அரசியலமைப்புடன் ஒத்திசைகின்றமை தொடர்பாக உயர் நீதிமன்றம் பின்வருமாறு தொகுத்துள்ளது:-

**வாசகம் 8 -** சட்டமூலத்தின் முன்மொழியப்பட்டுள்ள 9அ (2) ஆம் பிரிவானது அரசியலமைப்பின் 12(1) எனும் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளது. எனினும், உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு "…செய்யப்படலாம் (may ) " என்பதை "…. செய்யப்பட வேண்டும் (shall ) " என பதிலீடு செய்தால் குறிப்பிட்ட ஒவ்வாமை நீங்கும்.

குறிப்பிட்ட சட்டமூலத்தின் **9 ஆம் வாசகம்** அரசியலமைப்பின் 12(1) எனும் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளதுடன் 84 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே இது நிறைவேற்றப்படலாம். எனினும், உயர் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டவாறு குறித்த வாசகம் திருத்தப்படுமானால் அந்த ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 12 -** சட்டமூலத்தின் முன்மொழியப்பட்டுள்ள 17 (10) ஆம் பிரிவானது அரசியலமைப்பின் 12(1) எனும் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளதுடன் 84(2) எனும் உறுப்புரையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே இது நிறைவேற்றப்படலாம். எனினும், உயர் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டவாறு குறித்த வாசகம் திருத்தப்படுமானால் இந்த ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 13 -** சட்டமூலத்தின் முன்மொழியப்பட்டுள்ள 17அ(1) மற்றும் 17(ஆ) ஆகிய பிரிவுகள் அரசியலமைப்பின் 12(1) எனும் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளதுடன் 84(2) எனும் உறுப்புரையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே இது நிறைவேற்றப்படலாம். எனினும், உயர் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டவாறு குறித்த வாசகம் திருத்தப்படுமானால் இந்த ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 18(5) -** சட்டமூலத்தின் முன்மொழியப்பட்டுள்ள 22 (3அ) மற்றும் 22 (3ஆ) ஆகிய பிரிவுகள் அரசியலமைப்பின் 14(1)(அ), 14(1)(ஊ) மற்றும் 12(1) ஆகிய உறுப்புரைகளின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதுள்ளதுடன் 84(2) எனும் உறுப்புரையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே இது நிறைவேற்றப்பட வேண்டும். எனினும், உயர் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டவாறு 18(5) ஆம் வாசகம் திருத்தப்படுமானால் இந்த ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 18(7) -** சட்டமூலத்தின் முன்மொழியப்பட்டுள்ள 22(7) எனும் பிரிவானது அரசியலமைப்பின் 12(1) மற்றும் 14(1)(அ) எனும் உறுப்புரைகளுடன் ஒவ்வாதுள்ளது. எனினும், உயர் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டவாறு குறித்த வாசகம் திருத்தப்படுமானால் இந்த ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 20 -** சட்டமூலத்தின் முன்மொழியப்பட்டுள்ள 22அஈ எனும் பிரிவானது அர்த்தமற்றதாகவும் அரசியலமைப்பின் 12(1) எனும் உறுப்புரையுடன் ஒவ்வாததாகவும் இருப்பதால், 84(2) எனும் உறுப்புரையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே இது நிறைவேற்றப்பட வேண்டும்.

**வாசகம் 33 -** முன்மொழியப்பட்டுள்ள 59அ எனும் பிரிவானது அரசியலமைப்பின் 12 (1) எனும் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளதுடன் 84(2) எனும் உறுப்புரையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே இது நிறைவேற்றப்பட வேண்டும். எனினும், முன்மொழியப்பட்ட 59அ நீக்கப்பட்டால் இந்த ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 35 -** சட்டமூலத்தின் முன்மொழியப்பட்டுள்ள 68(1அ)(ஆ) மற்றும் 68(1அ) (இ) ஆகிய பிரிவுகள் அரசியலமைப்பின் 12(1) எனும் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளதுடன் 84(2) எனும் உறுப்புரையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே இது நிறைவேற்றப்பட வேண்டும். எனினும், உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முன்மொழியப்பட்டுள்ள 68(1அ) (ஆ) மற்றும் 68(1அ)(இ) ஆகிய பிரிவுகளை நீக்கி 35 ஆம் வாசகம் திருத்தப்படுமானால் இந்த ஒவ்வாமை நீங்கும்.

குறித்த சட்டமூலத்தின் ஏனைய ஏற்பாடுகள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளன.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானம் இன்றைய சபை நடவடிக்கைகளின் அதிகார அறிக்கையில் அச்சிடப்பட வேண்டும் என நான் கட்டளையிடுகிறேன்."

II

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2024 யூன் 12 ஆம் திகதி "சவீர மன்றம் (கூட்டிணைத்தல்)" எனும் சட்டமூலத்திலும் "களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்)" எனும் சட்டமூலத்திலும் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

III

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்கள் 2024 மே 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை பற்றிய விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்."

2. **பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) கல்வி அமைச்சர்—

(i) காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுவரி உரிமக் கட்டணங்கள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 ஜனவரி 12 ஆம் திகதிய 2366/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2024);

(ii) காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணங்கள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 01 ஆம் திகதிய 2369/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 03/2024);

(iii) 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சீட்டாட்டத் தொழில் உரிமமளித்தல் ஒழுங்குவிதிகள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 22 ஆம் திகதிய 2381/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி;

(iv) 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மே 17 ஆம் திகதிய 2384/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(v) 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மே 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(vi) 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம், 2023 இன் இறுதி வரவுசெலவுத்திட்ட நிலைப்பாட்டு அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) கல்வி அமைச்சர் —

(i) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பதிவாளர் நாயகத் திணைக்களம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை; மற்றும்

(ii) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, நுவரெலியா, அநுராதபுரம், களுத்துறை, மட்டக்களப்பு, மன்னார், கேகாலை, கண்டி, காலி, கிளிநொச்சி, கம்பஹா, அம்பாறை, அம்பாந்தோட்டை, மொனராகலை, மாத்தளை, குருணாகல், புத்தளம், கொழும்பு, பொலன்னறுவை, பதுளை மற்றும் மாத்தறை ஆகிய பிரதேச செயலகங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகள் ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான கைத்தொழில் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் தொடர்பிலான குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ நாலக பண்டார கோட்டேகொட அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2021 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை;

(ii) 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(iii) 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்கான வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள்

தொடர்பிலான குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) புத்தளம், இஹல புளியங்குளம, பஹல புளியங்குளம எனும் முகவரியில் வதியும் திரு. டி.எம்.ஜி.எஸ். திசாநாயக்கவினது 2024.04.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பியங்கர ஜயரத்ன சமர்ப்பித்தார்.

(2) சாய்ந்தமருது – 14, நீர் வழங்கல் வீதி, இல. 541/ஏ/1 இல் வதியும் திரு. ஏ.எல்.எம். முக்தாரினது 2024.03.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ இம்ரான் மஹ்ரூப் சமர்ப்பித்தார்.

(3) நிக்கவெரட்டிய, நபடேவ, தலாகொலஹேன, “சிரிசெவன” எனும் முகவரியில் வதியும் திரு. ஏ.எம்.ஆர்.எம். அதிகாரியினது 2023.11.10 ஆம் திகதியிடப்பட்ட

மனுவை கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர சமர்ப்பித்தார்.

(4) வாத்துவ, பொத்துபிட்டிய தெற்கு, சுற்றுவட்ட வீதி, “பிரியங்கர” எனும் முகவரியில் வதியும் திரு. பீ.எச்.ஆர். பிரியங்கர பெரேராவினது 2024.05.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ லலித் எல்லாவல சமர்ப்பித்தார்.

(5) அவிசாவளை, சீத்தாகம, இல. 11 – பீ இல் வதியும் திருமதி வை.கே. ஸ்ரீயாலதா எதிரிசிங்கவினது 2024.03.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஜகத் குமார சுமித்ராஆரச்சி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. சிறப்புரிமை:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் என்ற வகையில் திருமதி ஆத்மா திலுக்ஷி ஜயரத்னவினது நடத்தை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அநுராத ஜயரத்ன அவர்களினால் 2024.02.09 திகதி பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட சிறப்புரிமை பற்றிய கேள்வி, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரின் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவினால் பரிசீலிக்கப்பட்டு அக்குழுவினால் 2024 யூன் 06 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மூலம் அக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் 26(1)ஆ ஆம் பிரிவின் கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அறிக்கையிடும் பொருட்டு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1) :** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 செப்டெம்பர் 07 ஆம் திகதிய 2348/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(பி.ப. 12.52 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ ஜகத் சமரவிக்ரம தலைமை தாங்குவாராக” என கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன பிரேரிக்க அதனை கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.00 மணிக்கு கௌரவ ஜகத் சமரவிக்ரம தலைமை தாங்கினார்.)

“கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் தலைமை தாங்குவாராக” என கௌரவ சமன்பிரிய ஹேரத் பிரேரிக்க அதனை கௌரவ கயந்த கருணாதிலக்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.53 மணிக்கு கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.34 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2 ) :** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3 ) :** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4 ) :** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 01 ஆம் திகதிய 2360/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5 ) :** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 01 ஆம் திகதிய 2360/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் உரித்துப் பதிவு தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 01 ஆம் திகதிய 2308/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 8 மற்றும் 22 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 95 மற்றும் 96 ஆம் பிரிவுகளின் கீழ் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி ஆக்கப்பட்டதும், 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 34 ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருட்பட்டியல்கள் தொடர்பாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2024 பெப்ரவரி 27 ஆம் திகதிய 2373/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. ஒத்திவைப்பு (அவசர அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்கான பொருத்தமான பொறிமுறை) :** இப் பாராளுமன்றம் தற்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அப்போது நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே, பிரதிச் சபாநாயகரால் பாராளுமன்றம் வினாவின்றி ஒத்திவைக்கப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம், 2024 யூன் 19 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.